# PAAVAI
## COLLEGE OF EDUCATION

# PARIJATHAM

VOLUME - IX 2013

## LOCATION OF THE COLLEGE


The College was started in the year 2004-05. The College is being run by PAVAI Varam Educational Trust.


The college functions at Pachal,Namakkal District - 637 018. It is situated on the National Highways NH-7 which is the longest Highways of India that connects Kashmir and Kanyakumari. People from all over India can reach the College round the clock.

Railway Station is situated within 30 kms at Salem and within 50 kms at Erode where trains from the states like Kerala & Karnataka, New Delhi and Chennai pass through cities like Mumbai and Chennai.

Airport to the college is in Trichy at a distance of 90 kms and within 150 kms at Coimbatore.

| Nearby Towns | Distance |
|---|---|
| Rasipuram | 7 Kms |
| Namakkal | 18 Kms |
| Salem | 30 Kms |
| Thiruchengode | 36 Kms |
| Erode | 56 Kms |
| Karur | 55 Kms |
| Trichy | 95 Kms |
| Coimbatore | 150 Kms |



# PAAVAI

## COLLEGE OF EDUCATION

# PARIJATHAM

## VOLUME IX

## 2013



Hon'ble Chairman of Paavai Institutions
"Man of Great Ambition, Vision and Mission"
**Shri. CA. N.V.NATARAJAN**, B.Com., F.C.A

# Chairman's Message

The role of teachers in education system and in the society is pivotal. They play an integral part in the formation of quality education and good society. Teaching is an art with deep insight into child psychology. Understanding the art of teaching and the value of teachers in our society, Paavai College of Education stands as an architect in moulding the student- teachers for the upliftment of our society. I am sure that our teachers will be role models for the students.

I am happy that our College of Education brings out every year the annual magazine 'Parijatham', which contains very valuable articles and write-ups of the students and the staff. Let this magazine also reflect the potentials and creativity of both the students and the staff.

I wish the nineth volume of "Parijatham" should add a feather to our cap.

All the very best.

# EDITORIAL

The year 2012-2013 was the nineth academic year of our Paavai College of Education and this is the nineth volume of our Parijatham. It has been prepared highlighting the activities, to drive home the pursuit of the aims of our vision.

A significant progress was achieved in the nineth year and it marks another milestone in our development. All activities of our college were backed up by the motives of service, perfection and excellence.

The nineth volume of Parijatham 2013 unfolds the activities of Paavai College of Education during the academic year 2012-2013.

This issue of Parijatham also, like the previous years, has a lot of contents that will enrich your enthusiasm and enrapture you. Enjoy the soul pleasing fragrance of Parijatham and preserve it.



The source of energy to all staff
The spring of knowledge and action
Our Benevolent Principal

**Dr. K. RAJAMMAL.** M.Sc., M.Ed., Ph.D

CONTENT


| Sl.No. | PARTICULARS | Page No. |
|---|---|---|
| 1 | வாய்ப்பு | 12 |
| 2 | அனைத்தும் கற்றவன் | 13 |
| 3 | நகைச்சுவை | 14 |
| 4 | இ(ற)ரங்கும் நிலா | 14 |
| 5 | நட்பின் அடையாளம் | 15 |
| 6 | பெண்சிசுக் கொலை | 15 |
| 7 | மனிதாபிமானம் | 16 |
| 8 | தந்தை - மகன் உறவு | 16 |
| 9 | நெல்லி கனி | 17 |
| 10 | அழகு | 18 |
| 11 | பால் | 18 |
| 12 | சிந்திவிடு | 18 |
| 13 | இயற்கை வெட்கம் | 19 |
| 14 | நண்பர்களின் பெருமை... | 19 |
| 15 | கல்லூரி நட்பு | 20 |
| 16 | என் நண்பர்கள்... | 21 |
| 17 | நட்பு | 21 |
| 18 | நம்பிக்கை... | 22 |
| 19 | நட்பு | 23 |
| 20 | வாழ்க்கை | 23 |
| 21 | துணிச்சல் | 24 |
| 22 | வெளிச்சத்தில் விவசாயம் | 25 |

| | | |
|---|---|---|
| 23 | அண்ணன் சொன்னான் | 26 |
| 24 | வாழத்தான் நினைக்கிறோம்! | 27 |
| 25 | இல்லை என்பதே இங்கு உண்டு | 27 |
| 26 | இவர்களும் அவர்கள்தான் | 28 |
| 27 | அன்னையின் கருவறையில் | 29 |
| 28 | வெற்றி நிச்சயம் | 30 |
| 29 | விண்மீன் | 31 |
| 30 | நிலா | 32 |
| 31 | இயற்கை | 32 |
| 32 | நான் போருக்கு அஞ்சுவதில்லை | 32 |
| 33 | கனாக் காலங்கள் | 33 |
| 34 | உறவிழந்த கை | 34 |
| 35 | மனதில் ஒரு மழைக் குறிப்பு... | 34 |
| 36 | விவாகரத்து வாங்க முடியுமா...? | 35 |
| 37 | 3 Golden Points | 36 |
| 38 | கவிதை | 36 |
| 39 | நண்பர்களே! | 36 |
| 40 | அன்பு | 37 |
| 41 | தமிழின் உன்னதம் | 38 |
| 42 | பிரிவின் ஓர் நாள் | 39 |
| 43 | சாதனை | 40 |
| 44 | தோல்வி | 40 |
| 45 | FRIEND | 41 |
| 46 | MATHEMATICS | 41 |
| 47 | TABLE OF SOME MATHEMATICAL SYMBOLS | 42 |

# PAAVAI COLLEGE OF EDUCATION

NH-7, PACHAL, NAMAKKAL.

## ANNUAL REPORT – 2012 -2013

The honourable members of the Paavai Varam Trust started a B.Ed., training college in 2004 for the benefit of rural women students of Rasipuram and Namakkal District, in pursuit of their social commitment. Ever since that time, the Paavai College of Education is providing service to the Science and Arts graduate students to become good teachers. The college marches towards development and 100% results every year with the support of the trust members, constant guidance of the Chairman and Madam Correspondent. The Principal and staff members join hands with the management in this endeavour.

61 women and 24 men candidates are undergoing the B.Ed. course this year in Paavai College of Education. The students of the College of Education carry out many activities both in theory and in practical aspects, in fulfillment of their curriculum. The academic year 2012-2013 started on 13th September, 2012 and was inaugurated by the Chairman sir. To mark the start of the academic year, the kuthuvilakku was lit by the Correspondent madam. As a great gesture of respecting the parents, the B.Ed. students performed Padha Pooja to their parents at the inaugural function.

We are happy to mention a few programmes carried out by the B.Ed students.

The election of the office bearers for the academic year 2012-2013 of the B.Ed. College took place on 20th September, 2012.

The students are divided into seven groups, called the tutorial group, for carrying out the curricular activities such as seminars, symposium, oratorical programmes and article writing etc., and the co-curricular activities such as, carrying out decoration work and hall arrangements during meetings, organising meetings, writing charts and learning the art of making socially useful products like the Dolls, Greeting Cards, Envelops etc.,.

Daily two students are given the opportunity to give a talk for 5 minutes, in English or Tamil, on matters of general importance and on textual topics, soon after the Morning Prayer.

On 24th October, 2012 Saraswathi pooja was celebrated with usual joy. The students drew the picture of Goddess Saraswathi in Rangoli. In that function the students chanted religious rhymes and 108 Namavalee while offering flowers and Nevaithyam to Goddess Saraswathi. As a special performance, the students arranged a Golu with dolls.

The All Subject Association was inaugurated on 07.11.2012. The chief guest of the function was Mrs. M. Sumathi, Asst.Prof. PKR Arts College for Women, Gopichettipalayam. From then on, cultural programmes are held every week, in which each of the seven B.Ed students group is given a chance to perform cultural activities for one hour, on Wednesdays during the last two periods. The lecturer in charge of each group guides the students in the selection and execution of cultural activities.

On 24th November, 2012 the Education Day was celebrated. The chief guest of the function was Dr. Mrs. Kasturibai, Dean, Faculty development of Paavai Institutions.

Our B.Ed. students were sent to nearly 27 Government high schools and higher secondary schools from 26th November for 40 days teaching practice to improve their teaching ability as required in the university syllabus. They have successfully completed their training with the Co-operation of the guide teachers and Headmasters.

On 11th January, 2013 the Youth Festival on National Integration was celebrated at Paavai Institutions in which about 100 schools participated from Salem and Namakkal districts. Nearly 2000 high school students enthusiastically took part in competitions like Oratorical, Essay, Singing, Drawing, Poem, Quiz and Rangoli. The chief guest was Mr. V. Kumar, CEO, Namakkal, and the first three winners in each competition were awarded the prizes. Certificates of participation were given to all the students.

As a part of the academic programme, the B.Ed students prepared and presented papers in seminars on topics assigned to them in their core and optional subjects under the guidance of the subject lecturers concerned.

On 8th March, B.Ed. women students participated in the Womens' Day celebrations at Paavai Institutions.

Achievement Motivation seminar was conducted to the B.Ed. students in the class. The n'ach category theories were explained to students. Lectures were also given on various topics like Maslow's Hierarchy theory, the theories of Intelligence, etc,. The students enthusiastically took part in such seminars.

# Special coaching in English

As a measure to improve the writing and speaking skill of the B.Ed. students in English language, special coaching is given throughout the academic year.

Basic grammar and error free writing are taught to the students. Word building games and introduction of English poems are regularly practised in the class. We hope this will create an interest in the reading of English poems in students. Daily, one new English word with the meaning is given to the students in order to enrich their vocabulary.

We, the staff, express our deep gratitude and thanks to the management for providing every assistance and the help we need for our academic growth and improvement.

We also thank the CEO, DEO of Namakkal for their continued support in providing govt. schools to our students for teaching practice in Namakkal Districts.

The present set of students is preparing for the TET Exams getting appointment in government schools and a few are pondering over pursuing post graduate studies. About 95% of our past students have been appointed in government and private schools and a few run their own schools.

The Pavai Educational Trust is concentrating on increasing the calibre of the Paavai College of Education student teachers with top class discipline. Accordingly, the out going student teachers of Paavai prove to be excellent teachers and good human beings. Gods Blessings are always bestowed on this institution. This B.Ed. College will grow more and serve the society. The combined effort of the management, staff and students of this B.Ed. College will surely take this college to its heights.



# வாய்ப்பு

வடக்கூர் என்னும் கிராமம். அந்தக் கிராமத்திலேயே ராஜாதான் படு சோம்பேறி. ஆனால் சீக்கிரம் பணக்காரனாகி விட வேண்டும் என்ற எண்ணம் மட்டும் அவன் மனதில் சிம்மாசனம் போட்டு வீற்றிருந்தது. உழைப்புக்குத் தமிழிலோ பிற மொழிகளிலோ அர்த்தம் தெரியாது என்பதால் தன் குறுக்குப்புத்தியைக் கொண்டு கோணலாக சிந்திக்கத் தொடங்கினான்.

ஒரு நாள் ''மந்திர தந்திர ஜாலங்கள்'' நிறைந்த புத்தகம் ராஜாவுக்கு கிடைத்தது. அதை ஆர்வமுடன் படிக்கத் துவங்கிய ராஜாவுக்கு ஆச்சர்ய செய்தி ஒரு பக்கத்தில் கிடைத்தது.

இந்த ஊர் ஆற்றங்கரையில் விசித்திர கூழாங்கல் ஒன்று உள்ளது. அதைக் கொண்டு எந்தப் பொருளைத் தொட்டாலும் அந்தப் பொருள் தங்கமாகும். மற்ற எல்லா கற்களும் ஜில்லென இருக்கும்போது அந்த விசித்திரக் கல் மட்டும் சூடாகவே இருக்கும். இதன் மூலம் அந்த கல்லை அடையாளம் கண்டு கொள்ளலாம் என்பது தான் அவனை வாய்ப்பிளக்க வைத்த செய்தி.

இப்போது ராஜா ஆற்றங்கரையில்...........

லட்சக்கணக்கான கூழாங்கற்கள் அங்கு கிடந்ததைப் பார்த்து அவனுக்குத் தலை சுற்றியது. ஆயினும் பணக்காரனாக வேண்டும் எனும் ஆசையில் ஒவ்வொரு கல்லாக எடுத்து ஆற்றில் வீசினான்.

நாள் வாரமானது. வாரம் மாதமானது. இப்போது கல்லெடுத்து ஆற்றில் வீசுவது அவனுக்கு வழக்கமான ஒன்றாக ஆகிவிட்டது. சில சமயம் கூழாங்கல்லை எடுத்து வீசும்போது ஆற்றங்கரையில் ராஜா தூங்கிவிடுவதும் உண்டு. ஒரு நாள் அவன் கையில் அந்த சூடான கூழாங்கல் சிக்கியது. அப்போது அவன் அரைத்தூக்கத்தில் இருந்ததால் கல்லின் சூட்டை உணராமல் எடுத்து ஆற்றில் வீசிவிட்டான். கை நழுவி கல் ஆற்றில் விழுந்த பின்னர்தான் அது 'மந்திர ஜாலக்கல்' என்பது ராஜாவுக்கு உரைத்தது.

பல மாதங்களாக விடாமுயற்சியாக தேடினாலும், மனப்பூர்வமாகத் தேடாமல் விட்டதால் கிடைத்த சந்தர்ப்பத்தை தொலைத்து விட்டோமே என்று ஏமாந்து வீட்டுக்குத் திரும்பினான் ராஜா. பிறகு தன் தவறை உணர்ந்ததால் மனப்பூர்வமாக ஒரு சிறு தொழில் தொடங்கி வாழ்வில் வெற்றி பெற்றான்.

**நீதி**

மனப்பூர்வமாக செயலில் இறங்காவிட்டால் வாய்ப்புகள் கை நழுவும்.

# அனைத்தும் கற்றவன்

மணலில் வீடுகட்டிய போது

CIVIL படித்தேன்

காந்தத்தில் இரும்புத் துகளோடு விளையாடுகையில்

METALLURGY படித்தேன்

பொம்மைக்குத் துணி தைத்ததில்

TEXTILES படித்தேன்

டயர் வண்டி ஓட்டிக் கொண்டே

AUTOMOBILE படித்தேன்

பனை ஓலையில் காற்றாடி தயாரித்து

PRODUCTION படித்தேன்

PAPERல் ROCKET விட்டே

AERONAUTICSபடித்தேன்

வயலில் இரும்பு வேலிக்கு CURRENT கொடுத்து

ELECTRICAL படித்தேன்

WINDOW உடன் விளையாடிய போது

COMPUTER படித்தேன்

தீப்பெட்டியில் TELEPHONE செய்து

COMMUNICATION படித்தேன்

அதில் INFORMATION PASS பண்ணிய போது


IT படித்தேன்

கிணற்று மோட்டாருக்கு GREASE தடவி

MECHANICAL படித்தேன்

ஆனால் தரவில்லை யாரும் எனக்கு

B.E (ALL ROUNDER) பட்டம்!



# நகைச்சுவை

**நோயாளி** : டாக்டர் நீங்க சொன்ன மாதிரி என்னால முட்டை சாப்பிட முடியல

**டாக்டர்** : ஏன் எதனால?

**நோயாளி** : எங்க வீட்டுக் கோழி வெள்ளை முட்டைதான் போடுது. பச்சை முட்டை போடல

---

**ஹரி** : ஏண்டா ! நீ Maths Teacher வந்தா மட்டும் சாமி கும்பிடுற?

**பிரசாத்** : எங்க அம்மா சொன்னாங்க தூங்கும் முன் சாமி கும்பிட வேண்டுமென்று அதான்!

---

**மாணவன்** : செய்யாத தப்புக்கு அடிப்பீங்களா சார்

**ஆசிரியர்** : கண்டிப்பாக அடிக்க மாட்டேன். செய்யாத தப்புக்கு யாராவது அடிப்பார்களா?

**மாணவன்** : சார் நான் வீட்டுப்பாடம் செய்யலே சார்


**அ.சௌமியா**
(கணிப்பொறி அறிவியல்)

# இ(ற)ரங்கும் நிலா

*அன்பே*
*நீ அனுப்பிய*
*பிரிவுக் கடிதத்தின்*
*வார்த்தைகளை*
*வானத்தில் ஒளித்து வைத்தேன்*
*யாரும்*
*படித்து விடக்கூடாதென்று*
*எல்லா எழுத்துக்களையும்*
*களைத்து வைத்தேன்........*
*இருளாக இருந்தும்*
*நிலவு*
*அதைப் படித்து விட்டதென்றே*
*நினைக்கிறேன்*
*இன்று தூங்காமல்*
*எனக்காக*
*துக்கம் அனுஷ்டிக்கிறதே.............?*

■ M. துர்காதேவி





# நட்பின் அடையாளம்

வீசும் காற்று சொல்லும் நான் உன்னை
எப்படித் தேடினேன் என்று – ஏனெனில்
நான் உன்னைத் தேடியது அந்த
காற்றுடன் தானே!
பெய்யும் மழைக்கு தெரியும் – நான்
உனக்காக விட்ட கண்ணீர் துளிகள் ஏனெனில்
அந்த கண்ணீரை மழை மறைத்து விட்டது
வெண்ணிலவுக்குத் தெரியும்
நான் விழித்திருந்த இரவுகள் – ஏனெனில்
நான் உன்னை நினைத்து
ஏங்கிய இரவுகள் நிலவுடன் தானே!
வானத்தைப் பார் எண்ண முடியாத
நட்சத்திரக் கூட்டங்கள் – அதே போல்
என் நட்பின் ஆழத்தையும்
யாராலும் அறிய இயலாது!!!.....

C.Manimala, (Maths)

# பெண்சிசுக்கொலை

*கருவறையில் இருந்து*
*கனவுகளோடு வளர்ந்தேன்!*
*உலகினை ரசிக்க நினைத்தேன்*
*உற்சாகமாக இருக்க நினைத்தேன்!*
*தாயின் மடியில் தவழ நினைத்தேன்*
*தந்தையின் சொல் கேட்க நினைத்தேன்!*
*கருவறையை எட்டி உதைத்து*
*அழுது கொண்டே பிறந்தேன்!*
*பசியினால் கதறினேன்!*
*வெளுத்ததெல்லாம் பாலென்று புசித்தேன்*
*கள்ளிப் பாலென்று தெரியாமல்!!*
*கண் திறந்த – சில நொடிகளில்*
*கண் மூடினேன்!!*
*கனவுகளோடு எதிர்பார்த்த வாழ்க்கை*
*இன்றே!!!*
*கல்லறையில் முடிந்துமடிகிறது*
*கல்லறையில் முடிந்தாலும்*
*மீண்டும்*
*கருவறையில் உதிப்பேன்!!!....*




# மனிதாபிமானம்

அப்பா கேட்டார்
நான் கொடுத்த
இரண்டு ரூபாய் எங்கே?
அம்மா கேட்டாள்
நான் கேட்ட
பச்சை மிளகாய் எங்கே?
தம்பி கேட்டான்
நான் கேட்ட
பென்சில் எங்கே?
தங்கை கேட்டாள்
நான் கேட்ட
இரப்பர் எங்கே?
அவர்களுக்குத் தெரியாது
இந்த இரண்டு ரூபாய்
பசியால் வாடும்
ஏழைச் சிறுமியின் கையில்
மாம்பழமாய் மாறியது என்று...



P.Velmurugan (Maths)



# தந்தை-மகன் உறவு

மகன் வளரும் தருவாயில்
நீ எங்கு பறந்தாலும்
நூல் என் கையில் - தந்தை
என்னை விட்டால் சற்று
உயரப் பறப்பேன்? மகன்
விதைத்தது நான் - தந்தை
விளைந்தது நான் - மகன்
தந்தை இறக்கும் தருவாயில்
நான் கொஞ்சம் ஈரமுள்ளவனாய்
இருந்திருக்கலாம் - தந்தை
நான் கொஞ்சம் இரக்கமுள்ளவனாய்
இருந்திருக்கலாம் - மகன்
தந்தையின் எச்செயலும் நம் நன்மைக்கே!

# நெல்லிக்கனி

**மாதவன்** : ஆஹா! என்ன அற்புதமா இருக்கு இந்த மதுவகையை குடிக்கும்போது.

**பிரேம்** : என்ன வெயில் கொளுத்துகிறது! கொஞ்சம் ஜுஸ் தண்ணீ குடிச்சா நல்லா இருக்கும். இந்த வயலில் களை எடுக்கிற வேலை இன்னும் ஒரு வாரத்தில் முடிஞ்சிடும் என நினைக்கிறேன்.

**மாதவன்** : நாளைக்கு வேலைக்குப் போனாபோதும் காசு வேற தீர்ந்திடுச்சு

**பிரேம்** : இன்னிக்கு நேத்தவிட அதிக வெயில் அடிக்குது கம்மங்கூழ் குடிச்சா நல்லா இருக்கும். அப்பா! இப்ப எவ்வளவு குளுகுளுன்னு இருக்கு. அடுத்த வாரம் அறுவடை முடிஞ்சிடும்.

**மாதவன்** : சே! என்னடா வேலைக்கு போயே ஆகணுமா! போய்த் தொலைய வேண்டியது தான் காசு வேற இல்லை....

(மாலை)

300 ரூபாய் கிடைச்சிடுச்சு இதை வைத்து 3 நாள் வேலைக்குப் போகாமல் சந்தோஷமா குடிச்சுகிட்டே இருக்கலாம்.

தைத் திருநாள் அன்று

**பிரேம்** : பொங்கல் திருவிழாவுக்கு அறுவடை முடிஞ்ச கை நிறைய காசு கிடைச்சது தாயே! இதே போல் வருஷா வருஷம் கொடுக்கணும் தாயே! எல்லோரையும் நல்லா வைத்துக்கொள் தாயே!

ஏம்மா அந்த சாப்பாடு கொண்டுவாம்மா சாப்பிடலாம்.

அப்பப்பா அமிர்தமா இருக்கு.

**மாதவன்** : டாக்டர் இன்றைக்கு பொங்கல் நேரம் நான் போகணும் என்னால 'பெட்'ல எல்லாம் சேர முடியாது.

**டாக்டர்** : ஏப்பா! குடிச்சு குடிச்சு குடல் எல்லாம் வெந்து ஓட்ட விழுந்திடுச்சு இரத்த வாந்தி எடுத்துகிட்டு இருக்க எங்கப்பா போறேன்னு சொல்ற?

**மாதவன்** : டாக்டர்! சாப்பாடு சாப்பிட்டு வரேன் பசிக்குது.

**டாக்டர்** : சாப்பாடு எல்லாம் சாப்பிடக் கூடாது. துளி காரம் இல்லாம நல்லா மைய மசிச்ச சோறோ கஞ்சியோ குடிக்கணும்.

**மாதவன்** : ஐயோ காரமே இல்லாம துளி சோறு கூட என்னால சாப்பிட முடியாது.

**டாக்டர்** : உன் நல்லதுக்குதான் சொல்றேன் புரிஞ்சுக்கோப்பா



## நீதி

இரண்டு பேரில் மாதவன் ஆரம்பத்தில் ''இனிமையாக இருந்தது! சுகமாக இருந்தது! என்று சொல்லிக்கொண்டே கெட்டதை தீயதை அனுபவித்தான் அதனால் துன்பப்படுகிறான். பிரேம் வெயிலில் துன்பப்பட்டு கஷ்டத்தைப் பொறுத்துக் கொண்டு அயராது உழைத்தான் அதன் மூலம் சம்பாதித்து திருவிழா கொண்டாடுகிறான். பாடுபட்டத்துக்குப் பலன் கிடைத்ததால் அன்று சாப்பிடும் போது அமிர்தமாக இனிக்கிறது என்கிறான். அதாவது நெல்லிக்கனி முதலில் கசக்கும்? பிறகு துவர்க்கும் அது போல உழைப்பு உழைக்கும்போது கசக்கும் பொறுத்துக் கொண்டால் பலன் கிடைக்கும்போது இனிக்கும்.



# அழகு

‘‘தேய்வதும், வளர்வதும் நிலவுக்கு

அழகு என்றால்.........’’

‘‘உதிர்வதும் மலர்வதும் பூக்களுக்கு

அழகு என்றால்...........’’

‘‘தோழனே தோல்வியும் வெற்றியும் உன்

வாழ்க்கைக்கு அழகு தான்......’’

S. KOKILA (MATHS)





# பால்


அழுத குழந்தைக்கு பால் இல்லை

ஏழை வீட்டில்

நடிகனின் கட்அவுட்டுக்கு பால் அபிஷேகம்

தியேட்டர் வாசலில்.

S. BHUVANESWARI (MATHS)





# சிந்தி விடு

சிரிப்பை சிந்தி விடு – அது

அழகின் ரகசியம்

வியர்வை சிந்திவிடு

அது உழைப்பின் உன்னதம்

நல்ல வார்த்தைகளைச் சிந்திவிடு

அது நட்பின் துவக்கம்



## இயற்கை வெட்கம்

*எத்தனை காலம்*
*ஆனாலும்*
*வெட்கம் போகவில்லை!*
*தொட்டாச் சினுங்கிக்கு!*



# நண்பர்களின் பெருமை

நட்பு என்ற சொல்லுக்கு
அர்த்தம் தேடி அலைந்துக் கொண்டிருந்தேன்
உண்மையான என் நண்பர்களை
சந்திக்கும் வரை....
அதன் பிறகுதான் தெரிந்தது
உலகத்தில் புனிதமான இரண்டு
சொற்கள் என்னவென்று
(அறிந்து) தெரிந்து கொண்டேன்
ஒன்று அம்மா....
மற்றொன்று நண்பன்...
உலகத்தில் அனாதை
என்று யாரும் இல்லை
நண்பர்கள் நம்முடன்
இருக்கும் வரை...

S.Sakthivel, Maths.



# கல்லூரி நட்பு

எங்கோ பிறந்தோம் எங்கோ வளர்ந்தோம்
அனைவரும் இங்கே சந்தித்துக் கொண்டோம்
இதயத்தை நட்பால் இணைத்துக் கொண்டோம்
முகங்களைப் பற்றி யோசித்ததுமில்லை
இனம், பணம் பார்த்து நேசித்ததுமில்லை
எதிர்ப்பார்ப்புகள் ஏதுமில்லை..... ஏமாற்றங்கள் சிறிதுமில்லை
அவரவர் கருத்துக்களை இடம் மாற்றிக் கொண்டோம்
பாராட்டுக்களைப் பரிமாறிக் கொண்டோம்
சின்னச் சின்ன சண்டைகள் இடுவோம்
சீக்கிரத்திலேயே சமாதானத்திற்கு வருவோம்
கவலைகளைக் கிள்ளி எறிவோம்
இலட்சியங்களைச் சொல்லி மகிழ்வோம்
நன்மைகள் வளர முயற்சிகள் எடுப்போம்
என்றும் நட்பால் உயர்ந்து சாதிப்போம்
வானம் உள்ள காலம் வரையிலும்
வாடாமல் நீடிக்கும் நம்முடைய
இனிய நட்பு....
நாம் அனைவரும் இன்று பிரிந்து செல்கின்றோம்
ஆனால் நிச்சயம் எனக்குத் தெரியும், என்றாவது
ஒரு நாள் நாம் அனைவரும் மீண்டும் சந்திப்போம்
பழைய நினைவுகளோடு பேசத் தெரியாமல்
கண்ணீர் கலந்த கண்களோடு....
நமது நட்பு என்றும் நினைத்தாலே இனிக்கும்...

- V.கார்த்திகேயன், வரலாறு



# நட்பு

உதிர்ந்த ரோஜா பூக்களை
சேர்க்கவும் முடியாது
உன்னோடு மலர்ந்த
என் நட்பை
பிரிக்கவும் முடியாது
கண்கள்கூட கவிதை பேசும்
உன்னைப்பார்க்கும்பொழுது
ஆனால் கவிதைகூட கண்ணீர்
சிந்தும்
உன்னை பிரியும்பொழுது
அதுதான் நட்பு

- P.Arthi (Tamil)



# என் நண்பர்கள்...



உலகத்தில் பேச எத்தனையோ
வார்த்தைகள் உண்டு
ஆனால் அந்த அனைத்து
வார்த்தைகளிலும்
நாம் ரசிக்கும் முதல் வார்த்தை
அம்மா...
அதன் பின் நான் அதிகம்
ரசித்த வார்த்தை
நண்பன்...
என்னுடைய வாழ்வில் அதிகம்
என் சுகத்தையும், துக்கத்தையும்
பகிர்ந்து கொண்ட ஜீவன்கள்
என் நண்பர்கள்...!

S.KARTHIKEYAN,( ENGLISH)

# நம்பிக்கை...



உலகத்தில் எத்தனை பேர் எனக்கு
வாழப் பிடிக்க வில்லை என்று
சொல்கிறார்கள், ஆனால்
அவர்களுக்கு வாழப் பிடிக்க வில்லை...
என்பது பொய்
ஒரே ஒரு நாள் வாழும்
மே பூச்சி கூட,
அதன் கவலைகளை மறந்து
நம்பிக்கையுடன் தனது இறகுகளை
விரித்து இந்த உலகத்தை இரசிக்க
தன் இறக்கையின் மீது கொண்டுள்ள
நம்பிக்கையால் இந்த உலகை
சுற்றி வருகின்றது.
எனவே நம்பிக்கை என்ற
ஒன்று இருக்கும் வரை
உன் வாழ்வில் உனக்கு
தோல்வி என்பதே கிடையாது...
வாழ்ந்து பார்
நம்பிக்கையுடன்...
இந்த உலகமே உன்னை
வாழ்த்தும்...!
இப்பொழுதே புறப்படு
உனது இலட்சிய கனவுகளை நோக்கி
என்றும் நம்பிக்கையோடு....

P.SATHIS( MATHEMATICS)



# நட்பு


ஆயிரம் முறை இறந்தாலும்
ஒரு முறை பிறந்தாலும்
மறுமுறை பிறக்கும் போது
உன் நட்பு வேண்டுமென்று
இறைவனிடம் கேட்பேன்....
உன் நட்பை சிலையாக
செதுக்கி வைத்துள்ளேன்
''என் மனதில்''......
உளி கொண்டு அல்ல
என் உயிர் கொண்டு......!
கண்களை மூடினால் தான்
கனவுகள் பிறக்கும்
அந்த கண்களை திறந்தால் தான்
கனவுகள் பலிக்கும்
So Open Your Eyes............



# வாழ்க்கை

எதிர்பார்த்த வாழ்க்கை இங்கு
யாருக்கும் அமைவது இல்லை
ஆனாலும்
எதையும் எதிர்பார்க்காமல்
யாரும் வாழ்வது இல்லை!.......


R.NANDHINI (English)



# துணிச்சல்

இறப்பதற்கு ஒரு நொடி
துணிச்சல் போதும்.....
ஆனால்
வாழ்வதற்கு ஒவ்வொரு நொடியும்
துணிச்சல் வேண்டும்.....

R.NANDHINI (English)



சோதனைகள் பல சந்தித்தேன்
நின்று விடவில்லை
சாதனைகள் சில படைப்பதற்காக - இல்லை
சரித்திரம் படைப்பதற்காக

தோல்விகள் பல சந்தித்தேன்
நிறுத்திவிட வில்லை
வெற்றிகள் சில காண்பதற்காக - இல்லை
வாழ்வினை வெல்வதற்காக

துன்பங்கள் பல சந்தித்தபோதும்
வீழ்ந்துவிட வில்லை
இன்பங்கள் பல காண்பதற்காக - இல்லை
வாழ்வினை இனிமையாக்குவதற்காக
தன்னம்பிக்கை குவிந்து கிடக்கிறது
வாய்ப்புகள் சிதறிக்கிடக்கிறது
எதைக் கண்டும் அச்சம் வேண்டாம்!
தன்னம்பிக்கையுடன் போராடிக் கொண்டிருக்கும்
உங்களில் ஒருவன்

N. பூந்தமிழ்செல்வி (தமிழ்)

# வெளிச்சத்தில் விவசாயம்

காலமெல்லாம்
கலப்பைச் சிலுவை
சுமக்கும் இயேசுக்களே!
மூன்றாம் முறையும் அறைந்தால்
எந்தக் கன்னத்தைக் காட்டுவீர்கள்....?
மண்ணோடு மல்யுத்தம் நடத்தியதில்
உங்களுக்கு
ஓர் ஆறுதல் பரிசுக் கூடக் கிடைக்கவில்லை
வானும் மண்ணும்
உங்களுக்காக
அழ மறுத்த போது
நீங்களே
உங்களுக்காக அழுது கொண்டீர்கள்
ஆனால்
உங்கள் கண்ணீரிலும்
முட்செடிகள் தானே முளைத்தது.....?
நிலவில் நீர் இருப்பது
கண்டுபிடிக்கப்பட்டு விட்டதாம்
விவசாயிகளே!

விதையோடு
நீங்கள் நிலவுக்குச் சென்று விடுங்கள்
அங்காவது
நீங்கள்
வெளிச்சத்தில் விவசாயம் செய்வீர்களாக!
உங்கள்
கண்ணீரிலும்
வியர்வையிலும் இருந்து
உப்பு காய்ச்சி விற்றிருந்தால்
நீங்கள்
உலகப் பணக்காரர்களின்
வரிசையில் வந்திருப்பீர்கள்
குபேரன் வீட்டு வேலையாட்களும் கூட
உங்களைச் சந்திக்க விரும்புவதில்லை
வயலின் கதிர்த் தாலி
அறுப்பதாலா
இந்தத் தண்டனை?
இனியும் இந்த மாசுபட்ட மண்ணிலா
உங்கள்
புனித பாதம் நடக்க வேண்டும்?

R.KIRUTHIKA.







# அண்ணன் சொன்னான்...

இதோ
கிடைத்து விட்டது.
என் அண்ணனின்
இன்னுமொரு
சட்டை,
அம்மா தைத்த சிறு கிழிசலோடு
அவனின்
பழையது,
எனக்குப்
பொருந்தும் அளவு
நான் சிறியவன்.
அப்பாவின்
வறுமையில்
அவனுடைய
எல்லாமே
எனக்குப் பொருத்தமாக
அமைந்தது.
முதல் பக்கம் இல்லாத
புத்தகம்,
காதறுந்த புத்தகப் பை,
பேனா வைக்கும் பெட்டி
முன் இரவில்
தூங்கிப் போகும் எனக்கு,
மீதமிருக்கும் காரச்சேவு
என,
எனக்கென
என்ன புதிதாய்?'
கேட்கத் தோன்றிய நேரம்
அண்ணனே சொன்னான்.........
'நானும் வேலைக்குப் போகிறேன்.
நன்றாகப் படி
நீ தானடா எனக்கு எல்லாம்'
என்று !.....

சி. சுகனேசன், (பொருளறிவியல்)

# வாழத்தான் நினைக்கிறோம் !



சுதந்திரம் பெற்ற
சுகத்திலே சோம்பேறியாய்
சிலர் திரிவதும் உண்டு
இவ்வுலகத்திலே......
பாடுபட்டவர்கள்
பலர் உண்டு.....
அதைப் பயனற்று
பயன்படுத்துபவரும்
சிலர் உண்டு.....
நன்மைகள்
பல உண்டு அதை
நாடிச் செல்பவர்களும்
சிலர் உண்டு.......
பண்போடு வாழ்ந்தவர்கள்
பலர் உண்டு
அதைப் பறைசாற்ற
இலக்கியங்களும்
இங்கு உண்டு.........
வாழத்தான் நினைக்கிறோம்
ஆனால்
வாழ மறுக்கிறோம்
வாழ்வியல் நெறிகளோடு!

K. ISWARYA, (ENGLISH)

# இல்லை என்பதே இங்கு உண்டு

1. சாக்கடல் என்பது கடல் இல்லை.
2. வெட்டுக்கிளி தண்ணீர் குடிப்பதே இல்லை.
3. மண்புழுக்களுக்கு காது இல்லை.
4. முதலை தூங்கும்போது கண்களை மூடுவதில்லை.
5. ஐஸ்கட்டி ஆல்கஹாலில் மிதப்பதில்லை.
6. மூங்கில் என்பது மரவகை இல்லை.
7. ஜப்பான் மொழியில் ''ல'' எழுத்து இல்லை.
8. ''குவிஸ்'' வார்த்தைக்கென்று தனி அர்த்தம் இல்லை.
9. தேக்கு மரத்தை கரையான் அரிப்பதில்லை.

T.SASIKUMAR(PHYSICAL SCIENCE.)







# இவர்களும் அவர்கள் தான்

உளி எடுத்துக் கல்லுக்கு
உயிர் கொடுப்பவர்கள்
மட்டுமல்ல
அம்மிக் கல்லையும் ஆட்டுக் கல்லையும்
அற்புதமாய்ச் செதுக்கும் தொழிலாளியும்
சிற்பி தான்!

வண்ணத் தூரிகையால் எண்ணச் சித்திரங்களை
வரைந்தவர்கள் மட்டுமல்ல,
சாலையோரச் சுவர்களில் அச்சுக்கோர்த்தாற் போல்
அழகாய் எழுதும் தொழிலாளியும்
ஓவியன் தான்

தன்னை வேதனைப்படுத்தி என்னைப் பெற்றெடுத்து
இறுதியாய் சோற்றையும் எனக்கே தந்து
வயிற்றில் பசியையும், மனதில் நிறைவையும்
சரிபாதியாய் நிரப்பி உறங்கும் என் தாயும்
அன்னை தெரசாதான்!

**காந்தி பாடுபட்டார்**
**நாட்டுக்காக**
**நாடே பாடுபட்டது**
**காந்தி நோட்டுக்காக**



# அன்னையின் கருவறையில்



பத்து நிமிடங்கள் சுமையைச் சுமக்க பயப்படும்
இவ்வுலகத்தில்
பத்து மாதங்கள் தனக்குள்ளே என்னைச் சுமந்தாள்
தன்னை நேசிக்கத் தெரியாத அவளுக்கு
முகம் காணாத என்னை நேசித்தாள்
உலகத்தில் அழகாய் சொர்க்கத்தை அனுபவித்த
அவளுக்கு
பத்து மாதங்களும் நான் நரகத்தைக் காட்டினேன்
அதையும் பொறுத்துக் கொண்டாள்
இருளின் அறையிலிருந்து வண்ண உலகத்திற்கு
என்னைக் காட்ட
மரணத் தண்டனையை தனக்கு கொடுத்துக் கொண்டாள்
எத்தனை தொல்லைகள் நான் கொடுத்தாலும்
அதை எல்லாம் பொறுத்து அன்பை மட்டும் எனக்கு
கொடுத்தாள்,
என்னை பெற்றாள், வளர்த்தாள், நல்லறங்கள்
எனக்குள் ஊட்டினாள்
உலகமே என்னை வெறுத்தாலும் அவள் மட்டும் என்னை
நேசித்தாள்
எனக்காகத் தன் வாழ்க்கையின் சந்தோஷங்களைத் தந்த அவளுக்கு
நான் என்ன செய்வேன்?
ஏனம்மா என்னைக் கடன்காரியாக நிறுத்திவிட்டாய்.

**M.KANAGA, (ENGLISH)**



கனவு காண்பவர்கள் எல்லாம்
- தோற்பதில்லை
கனவு மட்டுமே காண்பவர்கள் தான்
- தோற்கிறார்கள்
விடியும் என்ற நம்பிக்கையில் உறங்கச் சென்ற நீ!
முடியும் என்ற நம்பிக்கையில் விழித்தெழு!
வெற்றி உன் காலடியில் மலரும்


P.M. சங்கீதா(வேதியியல்).



# வெற்றி நிச்சயம்

தோழியே மூளை இருக்கும் போது - ஏன்
மூலையில் தூங்கிக் கொண்டு இருக்கிறாய்?
விழித்தெழு! போராடு!
இமயம் இன்னும் இடிந்துவிடவில்லை
குமரி இன்னும் குறுகிவிடவில்லை.
சாதனை படிக்கட்டுகளில் உன் கால் பாதங்களை
பதிவு செய்ய வேண்டிய வயதில், சிலந்தியின்
வலைக்குள் சிக்கி சீர்பார்த்து திரும்பி வர
தருணம் இது இல்லை! நீ சிங்கம் போல் சீறி எழு!!
காவியம் படைக்கும் பல சிறந்த நூல்களாக
இருக்க வேண்டும் உன் எழுச்சி!
கண்கள் மூடி கனவு கண்டால் கலவரம் தான்,
சற்று விழித்துப் பார்த்தால் தான் நிகழ்வுகளின்
கால் பதிவுகள் உனக்குத் தெரியும்!
தோழியே நீ ஒருமுறை வீறுகொண்டு
எழுந்து பார் தெரியும்
வானவில்லும் தலை சாய்க்க விரும்பும்
உன் மடியில்,
காற்றும் உன் மேனியை உரசி பார்க்க உன்
வாசல் தேடி வரும்,
சூரியன் கூட ஒளி விளக்காய் உன் கையில்
சேர ஏங்கித் தவிக்கும்,
உலகமே உன்னைக் கண்டு வியக்கும்! - என்னைப்
பெற்றவளின் கருவறையும் வாய்ப்புக் கேட்டு
அழும் - உன்னை மீண்டும் பலமுறை சுமக்க!!
சுவாசிக்கும் முன் உன் கனவுகளை
நேசிக்க மறக்காதே! நீ வெற்றிப் பெற ஆசைப்பட்டால்
எல்லா இருளும் உனக்கு வெளிச்சம் தரும்,
நாளைய சரித்திரம் உன் பெயர் சொல்ல
ஒரு வாய்ப்பு கொடு,
தோழியே நீ விழித்தெழு! உனக்கு
வெற்றி நிச்சயம்!!!

S. **கார்த்திகேயன்** (English)



வெற்றி என்பது உன் நிழலைப் போல
நீ வெளிச்சத்தை நோக்கிச் சென்றால்
அது உன்னுடனேயே வரும்..........

A.P.J. **அப்துல் கலாம்**

சாதனை மனிதனே
வேதனை தகர்த்து வெளியே வா
தாங்கும் கரங்கள் பல்லாயிரம்
தளத்தில் உண்டு
நம்பிக்கையோடு விழித்து பார்
நாளை உனக்கே........



**தோல்வி உன்னை சந்திக்கும் முன் நீ சிந்தித்தால்**
**தோல்வி உன்னை சந்திக்க சிந்திக்கும்.**

N.KAVENNA, (PHYSICS)



# விண்மீன்

தொட்டுப் பார்க்கவும்,
கிள்ளிப் பார்க்கவும்
கரங்கள் இல்லாமல்
மலர்ந்ததோ
பல கோடி மலர்கள்.......



# இயற்கை


இறைவன் படைப்பின்
உருவம் நீ!
வாழும் உயிர்களின்
உலகம் நீ!
வாழ வைக்கும்
வையகமும் நீ!
பேசாத உயிர்களின்
உணவும் நீ!
பேசும் உயிர்களின்
சுவாசம் நீ!
இந்த உலகில் யாதும் நீ தானே!!!
இயற்கையே.........

M.SELVI, (ENGLISH)



# நிலா

மாலையில்
பொன் தட்டு - பௌர்ணமி
கண்டுவிட்டான்
திருடன்
காணவில்லையே பொன்
நிலவை - அமாவாசை
தேடிப்பிடிக்கப்
பதினைந்து நாட்கள்



# நான் போருக்கு அஞ்சுவதில்லை

என் இதயத்தின் மீது
வார்த்தைக் கற்களை
வீசிப் போனாய்
இங்கு பார்த்தாயா........
உடைந்த இதயத்தின்
ஒவ்வொரு சில்லிலும்
உன் முகமே சிரிக்கிறது....
உடம்புக்குள்
உள்நாட்டுப் போர்
உன் பிரிவுப் துப்பாக்கி சுட்டதில்
என் செல்களெல்லாம்
வெடித்துச் சிதறுகின்றன
நரம்புகள்
தசைகளைத் தூக்கில் போடுகின்றன
கண்கள்
வேலை நிறுத்தம் காரணமாய்
இரவு கூட காட்ட மறுக்கின்றன...........

M.GOWRI (ENGLISH)

# கனாக் காலங்கள்



கடந்து வந்த ஏணிப்படிகளை
கொஞ்சம் எண்ணிப் பார்க்கிறேன்.
முதல் முதலாய் பள்ளிவாசல்
கண்களில் கண்ணீரோடு
நீ ஆசையாய் என்னை அள்ளி எடுத்து
அரவணைத்து சுவாசப்படுத்தினாய்............
அந்த கதகதப்பு, பாசம், நேசம்
இன்றும் இருக்கிறது.
நெஞ்சினில் அழியாமல்
அம்மாவிற்கு இணையாய் வைத்தேன்
அரும்பு மீசை வயதில் ஏனோ
நீ சொன்னதெல்லாம் தப்பாகவே தெரிந்தது.
மெல்ல மெல்ல நான் வளர
சின்னஞ்சிறு கூட்டுக்குள்ளிலிருந்து உடைந்து
வெளிவர
பரந்து விரிந்த உலகை நீ காட்டினாய்
நாளைய இந்தியாவை நீ
தினம் தினம் செதுக்கையிலே சிற்பியாய் தெரிகிறாய்
தோல்வியில் நான் துவழ
தோளில் சாய்த்து எனை தேற்ற தோழனாய்
தெரிகிறாய்
எனதருமைக் குரியவர்களே!!
மீண்டும் தாயை நினைவு கூர்ந்தீர்கள்
எப்போது தெரியுமா?
வகுப்புகளின் கடைசி இருக்கையில் அமர்ந்து
தங்கள் தாலாட்டில் இருக்கை படுக்கையானபோது......
ஆழ்ந்த உறக்கம்
சட்டென இடிமுழக்கம்,
விழித்தால் தான் தெரிந்தது
என் எதிரே அர்ச்சனைகளின் ஆரம்பமென.

S.SANGEETHA (Physical Science)



# உறவிழந்த கை

எனது மூதாதையார் இறந்த போது,
எரிக்கவில்லை புதைத்தோம்.
குழியில் நான் மண்டியிட்டு
மண்ணை தள்ளிய போது,
மிகுந்த அறிவுடைய காமராசரைப்
போல் பரந்த நெற்றியையும்,
வாளை சாத்தியது போல் மூக்கையும்,
உண்மையை பேசத் தவித்து
அலைந்து ஓய்ந்த இரு விழிகளையும்,
மொழியைப் பரப்பும் மொழிக்
குறியைப் போல் இரு உதடுகளும்
பார்த்தேன் கண்ணீர் மல்க...

M.MOUNIKA (Physical Science)



# மனதில் ஒரு மழைக் குறிப்பு...



மேகக் குழந்தை சிரிக்கும்போது
சிந்தும் எச்சிலோ..........?
ஊடல் கொண்ட பூமிக்கு வானம்
வடித்தனுப்பும் கண்ணீர் கடிதங்களோ.........
வானவில் கோலம் போட - அங்கே
வாசல் தெளிப்பது யார்............?
வேலைத் தேடி அலையும் கதிரவனின்
வியர்வைத் துளிகளோ...........?
வெண்ணிலா முகம் கழுவதான்
கடலிடமிருந்து களவாடிய நீரையெல்லாம்
வானம் இப்படி
சுத்தமாய்ச் சொரிகிறதோ.............?




M.BANUPRIYA (English)

# விவாகரத்து வாங்க முடியுமா....?

நம் நாட்டில்
சில ஆண்களுக்கு
மதுபானக் கடைகளே
இரண்டாம் மனைவியாய் இருக்கிறது....
இதற்கு
மூன்று முக்கியமான சாட்சிகளை
நான் முன்மொழிவேன்
ஒன்று,
முதலில் மனைவியின் தாலியை
மதுபானக் கடையின்
முகவரிக்குத் தான் அனுப்பி வைக்கிறார்கள்!
இரண்டு
பிரிக்காத சம்பள உறைகளைக் கொடுத்து
குடி பட்ஜெட் போடச் சொல்கிறார்கள்!
மூன்று,
'உயிர் போகும் வரை உன்னுடன் தான்'
சாராய புட்டிகளின் மீது
சத்தியம் செய்கிறார்கள்!



M.THILAGAVATHI, (MATHS)



புரிந்து கொண்டால், கோபம் கூட
அர்த்தமுள்ளதாய் தெரியும்.....
புரியவில்லை என்றால் அன்பு கூட
அர்த்தம் இல்லாமல் தெரியும்!.........

விட்டுக் கொடு....!
விருப்பம் நிறைவேறும்,
மன்னிப்புக் கொடு...!
தவறும் குறையும்.
மனம் விட்டுப் பேசு.....!
அன்பு பெருகும்......

கலைந்து செல்லும்
''மேகங்கள்'' தொலைந்து விடுவதும் இல்லை!
பிரிந்து செல்லும்
''அன்பு'' மறந்து விடுவதும் இல்லை....

M.PREMA (MATHS)



‘‘சிரித்துப் பார் உன்முகம்
உனக்குப் பிடிக்கும்’’
‘‘சிரிக்க
வைத்துப்பார்
உன்முகம் எல்லோருக்கும்
பிடிக்கும்’’.

- சார்லி சாப்லின்

இந்த அழகான உலகை
சுற்றிப் பார்க்க வந்த சுற்றுலா
பயணிகள் நாம்.......
..........ஆனால்.............!
ஒருநாள் திரும்பிச் செல்லத்தான்
போகிறோம்..................
................தேதி மட்டும் ரகசியம்.......
‘‘கவலையும்
கண்ணீரும்
மனிதனைச் சாக
சொல்லும்’’ ஆனால்
நம்பிக்கை
மட்டுமே இந்த
மண்ணில் வாழச் சொல்லும்.





# நண்பர்களே!

மாணவர்களாக இருக்கும் போது,
சிரிப்பிலும் வேடிக்கையிலும் கவனத்தை
சிதறவிடுபவர்கள்! வருங்கால சந்தர்பங்களை
கூட நழுவ விட்டு விடுவார்கள்!
நமது எதிரிகள்! நம்முடனே பிறந்து
நம்முடனே இருக்கும் நமது ‘‘மன உணர்ச்சிகள்’’
அவற்றை நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு
வருவதுதான் நமது கடமை!
அதுவே, நமது வெற்றிக்கு வழியும் கூட..................

G.RAMARAJAN (Mathematics)



# அன்பு

அன்பு என்பது
தூயவரின் குணம்......!
ஆசை என்பது
மனிதனின் இயல்பு.........!
இதயம் என்பது
அன்பின் இருப்பிடம்.........!
ஈன்று எடுத்தவளே
அன்பின் உருவம்.............!
உள்ளத்தில் அன்பு
பிறந்தால்.........!
ஊரில் நல்ல
பெயர் உண்டு.........!
என்றும் மனதில்
அன்பு இருந்தால்........!
ஏற்றம் உண்டு
நம் வாழ்வில்..........!
ஐயம் இன்றி
வாழ்ந்திருந்தால்
ஒற்றுமை நிலவும்
உலகினிலே............!
ஓடம் போலே
செல்வோமே......!
ஔவை வழி
நடப்போமே.........!

K.அனிதா (தமிழ்)

# தமிழின் உன்னதம்

அகத்தியத்தில் பிறந்த தமிழ்
தொல்காப்பியத்தில் வளர்ந்த தமிழ்
நன்னூலில் வாழ்கின்ற தமிழ்
இன்று மொழிக்கலப்பு என்ற
தொற்று நோயால் பாதிக்கப்பட்டு உள்ளதே
இதை வேரோடு ஒழிக்க வேண்டும்.
தமிழ்த் தேன் கடலைக் காக்க வேண்டும்
மொழிக்கலப்பு நோயைப் போக்க வேண்டும்.
அதற்கு மருந்தைக் கண்டறிய வேண்டும்
தமிழின் சுவையை உணர வேண்டும்.
தமிழினம் தமிழ்நாட்டைக் காத்தல் வேண்டும்.
மொழி அழியுமானால் நாடு அழியுமே!
தமிழ் அழியுமானால் தமிழகம் அழியுமே!
பிறந்த நாளை அறியாதது தமிழ்!
வாழ்வின் இலக்கியத்தை உணர்த்துவது தமிழ்!
அறிவை வகைப்படுத்தியவன் தமிழன்
அதை உலகிற்கு உணர்த்தியவன் தமிழன்
உலகிலே அதிகம் மொழி பெயர்க்கப்பட்டு
படிக்கக் கூடியது தமிழில் எழுந்த திருக்குறள்தானே!
இத்தகைய தமிழை உணர்தல் வேண்டும்.
தமிழிலே பிறந்து தமிழிலே இறத்தல் வேண்டும்.
செந்தமிழைச் செழுமையானத் தமிழாக மாற்ற
வேண்டும்.
அதற்குத் தமிழர்களாகிய நாம் பாடுபட வேண்டும்.
வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!

மு.அர்ஜுன்சிங், (Mathematics)



# பிரிவின் ஓர் நாள்



பிரிவு என்பது நாம்
ஒருவரை ஒருவர் சந்திக்காமல் இருப்பதல்ல
நம் நட்பை என்று
மறக்கின்றோமோ அதுதான் - பிரிவு
இப்பொழுது நமக்குள் ஏற்பட்டிருப்பது - பிரிவு அல்ல
நம் நட்பை சோதிக்க கடவுள்
வைத்திருக்கும் பரிட்சை
நாம் ஒருவரை ஒருவர்
சந்திக்காமல் போகலாம்
அதனால் நாம் கொண்ட நட்பு குறையாது
நாம் பழகிய காலங்களை
நினைத்துப் பார்க்கும் போது
நம் நட்பு வளர்கிறது
நாம் வாழும் வரை நம் நட்பு வாழும்
நாம் மறைந்தாலும் நம் நட்பு மறையாது
FRIENDS FOREVER.

ந. பாக்கியரதி.(Physical Science)



# நட்பு

வாழ நினைப்பவனையும் கொல்லத்
துடிப்பது தான் காதல்!
சாகத் துடிப்பவனையும் வாழ
வைப்பது தான் நட்பு!
நட்பு என்பது கல்லுக்குள்
இருக்கும் சிற்பம் போல!
உணர்ந்தவனுக்கு அது சிற்பம்
உணராதவனுக்கு அது கல்!



# சாதனை

வாழ்க்கையில் சாதனை படைத்தேன்
என்பதை விட!
யாரையும் வேதனை படுத்தவில்லை
என்பதே உண்மையான சாதனை!

வி.மாதேஸ்வரி (தமிழ்)



# தோல்வி

என்னைச் சந்தித்தவர்கள் எல்லாம் சிந்திப்பார்கள்!
என்னைச் சந்திக்க வேண்டும் என்பதற்காக
இல்லை!
மீண்டும் சந்திக்கக் கூடாது என்பதற்காக!

– தோல்வி



# FRIEND


F - First
R - Relation
I - In which
E - Earth
N - Never
D - Dies



# MATHEMATICS

M - Mental work
A - Attention
T - Timing
H - Heroic activities
E - Eagerness
M - Memory Power
A - Accuracy
T - Talent
I - Imagination
C - Capacity
S - Sincerity

M.Kavitha. (Maths)



# TABLE OF SOME MATHEMATICAL SYMBOLS

| Symbol | Name | Date of earliest Use | First Author to Use |
|---|---|---|---|
| +, - | Plus and minus sign | 1360 | Nicole Oresme |
| √ | Square root | 1525 | Christoff Rudolff |
| = | Equal Sign | 1557 | Robert Recorde |
| X | Multiplication Sign | 1618 | William Oughtred |
| <,> | Less than and greater than sign | 1631 | Thomas Harriot |
| ÷ | Division Sign | 1659 | Johann Rahn |
| ∞ | Infinity Sign | 1655 | John Wallis |
| ≤ , ≥ | Less than or equal to sign and greater than or equal to sign | 1670 | Pierre Bouguer |
| ∩ , U | Intersection and Union Sign | 1888 | Giuseppe Peano |
| ( ) | Matrices Notation | 1909 | Gerhard Kowalewski |
| n√ | n th Root | 1629 | Albert Girard |
| / | Division slash | 1718 | Thomas Twining |
| ! | Factorial Sign | 1808 | Christian Kramp |
| ‖ | Absolute Value Sign | 1841 | Kari Weierstras |
| Z | Integer Numbers Set sign | 1930 | Edmund Lan dau |
| ∀ | For all sign | 1935 | Gerhard Gentzen |
| Φ | Empty set sign | 1939 | Nicolas Bourbaki |

K. KARTHIK (MATHEMATICS)




In the presence of our Chairman and Madam Correspondent illuminates the lamp to mark the inauguration of the Academic year 2012-2013



Students performing patha pooja to their parents




A debate was conducted in the presence of our chairman and madam Correspondent, based on the “Vijay TV Serial 7c programme”



Student teachers participated in debating




Our cheif guest illuminates the lamp to mark the inauguration of All Subjects Association" in the presence of our Chairman and Correspondent




Our student exposing their talents in the "All Subjects Association"




Boys exposing their talents through dance




A skit by the student teachers in Association Inaugural function



Saraswathi pooja celebrations at B.Ed., College




Our B.Ed. students in Annual day celebrations




Our student teachers enacting a scene for the song
"Ippadithan Irukka vendum Pombala"




Out student teachers as farmers



Department of English



Department of Mathematics



Department of Physical Science



Department of Tamil



Department of Computer Science



Department of Biology



Department of History



Department of Commerce

## PAAVAI EDUCATIONAL INSTITUTIONS

Paavai Engineering College

Paavai College of Engineering

Pavai College of Technology

Paavaai Group of Institutions

. School of Engineering

. School of Management Studies

Pavai Arts and Science College for Women

Paavai Polytechnic College

Pavai  Varam Polytechnic College

Paavai College of Education

Paavai Teacher Training Institute

Paavai Vidhyashram CBSE School

Paavai Matriculation Higher Secondary School


PAAVAI INSTITUTIONS
Think Education... Think Paavai


Paavai Group of Schools


Paavai Institutions

# PAAVAI INSTITUTIONS

NH-7, Pachal, Namakkal-637 018.
Web: paavai.edu.in

